## பரமக்குடியில் நடைபயிற்சியில் 1 மணி நேரத்திற்கும் மேலாக

# முதல்வர் மு.க.ஸ்டாலின் வீதி, வீதியாகச் சென்று வாக்குச் சேகரித்தார்!









பரமக்குடியில், சட்டமன்றத் தேர்தல் பரப்புரைக் கூட்டத்திற்கு வருகைபுரிந்த கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.4.2026) காலை அங்கு நடைபயிற்சி மேற்கொண்டபோது, அங்குள்ள பொதுமக்கள் மற்றும் வியாபாரிகளை சந்தித்து பரமக்குடி தொகுதி கழக வேட்பாளர் கே.கே. கதிரவன் அவர்களை ஆதரித்து வாக்கு சேகரித்தார். உடன் முதுகுளத்தூர் தொகுதி கழக வேட்பாளர் – அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், இராமநாதபுரம் மாவட்ட கழகச் செயலாளரும், இராமநாதபுரம் தொகுதி கழக வேட்பாளருமான காதர்பாட்சா முத்துராமலிங்கம், ஆகியோர் உள்ளனர்.

### நம்முடைய பிள்ளைகளின் எதிர்காலத்தையும் – மதநல்லிணக்கத்தையும் பாதுகாத்திட

# திராவிடமாடல் ஆட்சி தொடர மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு வாக்களிப்பீர்!

## தென்காசி மாவட்ட தேர்தல் பரப்புரையில் கனிமொழி கருணாநிதி எம்.பி. பேச்சு!

தென்காசி, ஏப். 13 -
தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி ஏப்ரல் 11 ஆம் தேதி மாலை கடையநல்லூர் ம.தி.மு.க. வேட்பாளர் தி.மு.ராஜேந்திரன், சங்கரன்கோவில் காங்கிரஸ் வேட்பாளர் சங்கை கணேசன், தென்காசி தி,மு,க, வேட்பாளர் கலை கதிரவன், ஆலங்குளம் மனோஜ் பாண்டியன் ஆகியோருக்கு வாக்கு சேகரித்தார்.



அப்போது அவர் பேசியதாவது:

"கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றித் தந்திருக்கிறோம் என்ற உரிமையோடு உங்களிடம் வாக்கு கேட்டு வந்திருக்கிறேன். நமது அரசு செயல்படுத்திய நான் முதல்வன் திட்டத்தால், நம் பகுதியின் இளைஞர்கள், இளம் பெண்கள் இன்று படித்து IAS, IPS தேர்வுகளிளெல்லாம் வெற்றிபெற்றவர்களாக உருவாகி இருக்கிறார்கள்.

நான் முதல்வன் திட்டத்தால் ஜப்பானில் பணியாற்றும் பெண்!

ஒன்றியத்தில் இருக்கக்கூடிய BJP நம்மை ஹிந்தி படி, ஹிந்தி படி என்கிறார்கள். ஆனால், நான் முதல்வன் திட்டத்தின் வழியாக நம்ம தமிழ்நாட்டிலிருந்து படிச்சு போன ஒரு பெண்ணு இன்னுக்கு ஜப்பான்ல வேலை பாத்துக் கொண்டு இருக்காங்க. ஒரு நிகழ்ச்சியில் ஜப்பானீஸ் மொழி கற்றுக்கொண்டு அந்த மொழியிலேயே நன்றி சொல்றாங்க நம்ம ஊர் பொண்ணு .

இப்படி உலகம் முழுவதும் நம்முடைய பிள்ளைகளுக்காக இந்த ஆட்சி மறுபடியும் தொடர வேண்டும் என்ற காரணத்திற்காக உங்களை எல்லாம் தேடி வந்து வாக்கு கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

மழை தூறிக்கொண்டிருக்கிறது. ஒரு அழகான திருக்குறள் இருக்கிறது, எல்லார்க்கும் பெய்யும் மழை என்று. மழை எல்லாருக்கும் பொதுவாதான் பெய்யும். யாரையும் விட்டுவிட்டுப் பெய்வது கிடையாது. எல்லாருக்கும் பொதுவாதான் மழை பெய்யும். அது போலத் தான் நம்முடைய அண்ணன் தளபதி அவர்களுடைய திராவிட மாடல் ஆட்சியும் மழையைப் போல எல்லார்க்கும் பொதுவானது.

அவர் ஆட்சிக்கு வந்த உடனே என்ன சொன்னார்? இந்த ஆட்சி எனக்கு வாக்களித்தவர்களுக்கும் வாக்களிக்காதவர்களுக்குமான ஆட்சி என்று சொன்னார். எல்லாரையும் அரவணைக்கக் கூடிய ஆட்சியாக இருக்கும் என்று சொன்னார். அதை நிறைவேற்றி இருக்கக்கூடிய முதலமைச்சர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள்.

**மக்களைப் பிரிக்கும் பா.ஜ.க.!**

ஆனால் டெல்லியில் இருக்கக்கூடிய BJP எப்படிப்பட்ட ஆட்சியை நடத்திக்கொண்டு இருக்காங்க? மக்களைப் பிரிக்கக்கூடிய ஆட்சியை நடத்திக் கொண்டு இருக்கிறார்கள்.

தேர்தலுக்காக, அரசியலுக்காக மக்களுக்கு இடையே மதரீதியான கலவரங்களை உருவாக்கிக் கொண்டிருக்கிற ஆட்சியை நடத்துகிறார்கள். மணிப்பூரில் இன்று வரைக்கும் கலவரங்கள் முடிவுபெறவில்லை. அதே போல யுனிஃபார்ம் சிவில் கோடு கொண்டுவருகிறேன் என்று சொல்லி, அவர்கள் ஆளும் மாநிலங்களிலே அதை நிறைவேற்றி இருக்கக்கூடியவர்கள் தான் ஒன்றியத்திலே இருக்கக்கூடியவர்கள்.

**இஸ்லாமியர்களுக்கு எதிரான பா.ஜ.க.!**

அதுபோல குடியுரிமை சட்டம், முத்தலாக் சட்டம் என கொண்டு வந்து இஸ்லாமியர்களுக்கு எதிரான ஒரு நிலைப்பாட்டை எடுத்திருக்கக்கூடிய ஆட்சிதான் பா.ஜ.க.. தமிழ்நாட்டின் வெள்ள பாதிப்புக்குக் கூட நிவாரணம் வழங்காத ஆட்சிதான் பா.ஜ.க.. அவர்களோடு தான் இன்று கூட்டணி வைத்துக்கொண்டு இருக்குறது அ.தி.மு.க..

இஸ்லாமியர்களுக்கு. கிறிஸ்தவர்களுக்கு எதிராகச் செயல்படக்கூடிய பி.ஜே.பி.யோடு இன்று கைகோர்த்துக்கொண்டு மேடையில் எங்களுக்கு வாக்களியுங்கள் என்று கேட்டுக்கொண்டு இருக்கிறார் எடப்பாடி.

தொடர்ந்து முதலமைச்சரையும் மற்றவர்களையும் விமர்சனம் செய்துகொண்டிருக்கிறார். தான் முதலமைச்சராக இருந்ததைக் கூட மறந்து எந்த விததராதரமும் இல்லாமல் எல்லாரையும் பேசிக் கொண்டிருக்கிறார். இவர்களுக்கு இந்தத் தேர்தலிலே நாம் சரியான பாடத்தைச் சொல்லித் தர வேண்டும். தமிழ்நாட்டில் உங்களுக்கு இடம் இல்லை, இல்லை, இல்லை என்பதைப் புரிய வைக்கக்கூடிய தேர்தலாக இந்தத் தேர்தல் வெற்றி நமக்கு இருக்க வேண்டும் என்று உங்களிடமெல்லாம் நான் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

நாம் ஆட்சிக்கு வந்ததும் சகோதரிகளுக்கு 8 ஆயிரம் ரூபாய்க்கான கூப்பன் வழங்கப்படும். உங்களுக்குப் பக்கத்தில் இருக்கக்கூடிய எந்தக் கடைக்கு வேண்டும் என்றாலும் நீங்கள் சென்று அந்தக் கூப்பனைக் கொடுத்து, உங்களுக்கு என்ன வேண்டுமோ அதை வாங்கிக் கொள்ளலாம். வீட்டில் ப்ரிட்ஜ் இருந்தால், வாஷிங் மிஷின் வேண்டுமானால் வாங்கிக்கொள்ளலாம்.

உங்களுடைய வேலையை எது குறைக்குமோ, நீங்கள் முடிவு செய்து வாங்குங்கள் என்று நம்முடைய முதல்வர் அந்த 8,000 ரூபாய்க்கான கூப்பனை உங்களுக்காக வழங்கியிருக்கிறார்கள்.

அதுபோல, விவசாயிகளுக்கு மீட்டர் பொருத்தப்படாத மோட்டார்கள் 20 லட்சம் விவசாயிகளுக்கு மேல் பயன்படக் கூடிய வகையிலே வழங்குவேன் என்று உறுதி கூறியிருக்கிறார் முதல்வர்.

இது அத்தனையும் நிறைவேற்றித் தந்திட நம்முடைய பிள்ளைகளுடைய எதிர்காலத்தைப் பாதுகாத்திட. தமிழ் நாட்டை ஒரு அமைதியான பூங்காவாகப் பாதுகாத்துட. மதநல்லிணக்கத்தைப் பாதுகாத்திட நமது முதல்வருக்கு வாக்களிக்க வேண்டும்.

தேர்தல் தோல்வி ஜுரம் வந்து, தேர்தல் ஜன்னி வந்து, ஒரு எதிர்க்கட்சி தலைவருக்கு இருக்க வேண்டிய தரம் இல்லாமல் பேசிக்கொண்டு இருக்கிறார் எடப்பாடி பழனிசாமி. நம்மை எல்லாம் மிரட்டி வைத்துவிடலாம் என நினைத்துக்கொண்டிருக்கிறார். அவர் ஒன்றை புரிந்து கொள்ள வேண்டும். தி.மு.க.வை மிரட்டுவதற்கு இந்த மண்ணில் இந்த நாட்டில் யாரும் பிறக்கவில்லை. நீங்கள் மிரட்ட மிரட்டதான் எங்களுக்கு இன்னும் உரம் ஏறும். நிறைய மிரட்டல்களை பார்த்து வந்திருக்கிறோம்.

நம்ம தமிழ்நாட்டு மக்கள் மிக தெளிவானவர்கள், இளைஞர்கள் அதை விட தெளிவானவர்கள். யார் உங்களுக்கு நல்ல எதிர்காலத்தை உருவாக்கித் தருவார்கள்? யார் தமிழ்நாட்டை முன்னேற்ற பாதையிலேயே அழைத்துச் செல்லக்கூடியவர்கள் என்று தெளிவாகத் தெரிந்தவர்கள் நீங்கள்.

தொழில் வளர்ச்சி வேணும்னா யாருக்கு வாக்களிக்க வேண்டும்? வேலை வாய்ப்புகிடைக்கணும்னா, தமிழ்நாட்டு உரிமைகளுக்காகப் பாடுபட வேண்டும்? தமிழ் பண்பாட்டை, மொழியை காக்க யாருக்கு வாக்களிக்க வேண்டும்? இதெல்லாம் தெளிவாகத் தெரிந்தவர்கள் நீங்கள். தவறு பண்ணமாட்டீங்க. அதனால் யாரைப் பற்றியும் நாம வீணா பேச வேண்டிய அவசியமே கிடையாது.

திராவிட மாடல் நல்லாட்சி தொடர்ந்திட மறுபடியும் ஒரு வாய்ப்பை வழங்க வேண்டும். தமிழ்நாட்டின் துரோகிகளுக்கு சரியான பாடத்தை சொல்லித் தர வேண்டும்"

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி.. பேசினார்.

## சட்டமன்றத் தேர்தல் - 2026

### கழகத் துணைப் பொதுச் செயலாளர்



## கனிமொழி கருணாநிதி எம்.பி.

### தேர்தல் பிரச்சாரச் சுற்றுப் பயண விபரங்கள்

### (திருநெல்வேலி, கன்னியாகுமரி)

**13.04.2026 (திங்கள்கிழமை)**

| நேரம் | இடம் |
|---|---|
| 10:00 AM | **திருநெல்வேலி தொகுதி -** கங்கைகொண்டான் பஜார் |
| 11:00 AM | **நாங்குநேரி தொகுதி -** பரப்பாடி காமராஜர் சிலை அருகில் |
| 04:00 PM | **இராதாபுரம் தொகுதி -** திசையன்விளை காமராஜர் சிலை முன்பு |
| 06:00 PM | **கன்னியாகுமரி தொகுதி -** தெங்கம்புதூர் ஜங்ஷன் |
| 07:00 PM | **நாகர்கோவில் தொகுதி -** இராஜாக்கமங்கலம் ஜங்ஷன் |
| 08:00 PM | **குளச்சல் தொகுதி -** குளச்சல் அண்ணா சிலை அருகில் |
| 09:00 PM | **பத்மநாபபுரம் தொகுதி -** குலசேகரம் அரசமூடு ஜங்ஷன் |